ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1810/22 - 2013 මැයි මස 14 වැනි අඟහරුවාදා - 2013.05.14

*1810/22 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

எனது இலக்கம் : 4/3/1 (நியமனங்கள் - காணி கொள்ளல்).

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 63 (2) அ ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான், கீழ்க்காணும் கட்டளையை இத்தால் விதிக்கின்றேன்.

கட்டளை இல. 2013/3 - நியமனங்கள்

இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தினால் அமுல் செய்யப்படுகின்ற கொழும்பு பெரும்பாக அபிவிருத்தித் திட்டத்தின் கீழான காணி எடுத்தற் பணிகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு, இங்கு, கீழ்க்காணும் அட்டவணையின் நிரல் I இல் காட்டப்பட்ட அதிகாரப் பிரதேசங்களில், நிரல் II இல் காட்டப்பட்ட உத்தியோகத்தர், நிரல் III இல் காட்டப்பட்ட காலப்பகுதிக்கு காணி எடுத்தற் சட்டத்தின் கீழ், காணி எடுத்தற் பணிகளை மேற்கொள்வதற்கான உத்தியோகத்தராக இத்தால் நியமிக்கப்படுகின்றார்.

| நிரல் I<br>அதிகாரப் பிரதேசம்<br>பிரதேச செயலாளர் பிரிவுகள் | நிரல் II<br>உத்தியோகத்தரின் பெயர் | நிரல் III<br>காலப்பகுதி |
|---|---|---|
| கொழும்பு, திம்பிரிகஸ்யாய, கடுவலை, கொலொன்னாவை ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை, தெஹிவளை, மஹரகம. | திரு. கொட்வின் விஜேதாச அபேசூரிய (இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | 2013.04.08 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் செய்யப்படும் வரை. |

ஜனக பண்டார தென்னக்கோன்,  
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,  
“மிஹிகத்த மெதுர”,  
காணிச் செயலகம்,  
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,  
பத்தரமுல்லை,  
2013, மே 09.

5- 803/1

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

எனது இலக்கம் : 4/3/1 (நியமனங்கள் - காணி கொள்ளல்).

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 63 (2) அ ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான், கீழ்க்காணும் கட்டளையை இத்தால் விதிக்கின்றேன்.

கட்டளை இல. 2013/2 - நியமனங்கள்

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கம்பஹா நிர்வாக மாவட்டத்தில் அமுல் செய்யப்படுகின்ற களனி - முந்துன்கொடை, மாகொல- உடுப்பில ஆகிய நெடுஞ்சாலைக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய காணி எடுத்தற் பணிகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு , இங்கு, கீழ்க்காணும் அட்டவணையின் நிரல் I இல் காட்டப்பட்ட அதிகாரப் பிரதேசங்களில், நிரல் II இல் காட்டப்பட்ட உத்தியோகத்தர், நிரல் III இல் காட்டப்பட்ட காலப்பகுதிக்கு காணி எடுத்தற் சட்டத்தின் கீழ், காணி எடுத்தற் பணிகளை மேற்கொள்வதற்கான உத்தியோகத்தராக இத்தால் நியமிக்கப்படுகின்றார்.

| நிரல் I<br>அதிகாரப் பிரதேசம்<br>பிரதேச செயலாளர் பிரிவுகள் | நிரல் II<br>உத்தியோகத்தரின் பெயர் | நிரல் III<br>காலப்பகுதி |
|---|---|---|
| பியகமை | திரு. காமினி குருப்புஆரச்சி (ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்). | 2013.03.01 ஆந் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் செய்யப்படும் வரை. |

ஜனக பண்டார தென்னக்கோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013, மே 09.

5- 803/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.